[திரு. எஸ்.பி. வேலுமணி] [2018 ஜூலை 4

முற்பகல் 11–40

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, சென்னை மாநகராட்சி, 56–வது வார்டில் இராமசாமி தெரு, சபரிமுத்து தெரு, புதுத் தெரு, நைனியப்பன் தெரு, சண்முகராயன் தெரு, போர்ச்சுக்கல் ஒன்றாவது தெரு, போர்ச்சுக்கல் இரண்டாவது தெரு மற்றும் வார்டு எண் 59–ல் வால்டாக்ஸ் சாலை, எடப்பாளையம் தெரு சந்திப்பு, ராசப்ப செட்டித் தெரு, மின்ட் தெரு, ஏகாம்பரேஸ்வரர் கோயில் தெரு ஆகியவற்றிலிருந்து என்.எஸ்.சி. போஸ் சாலை வரையிலுள்ள கட்டடங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், இராயபுரம் கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள pumping station–ல், பெறப்பட்டு, சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட 600 மில்லி மீட்டர் விட்டமுள்ள கழிவுநீர் உந்து குழாய்கள்மூலம் கொடுங்கையூர் கழிவுநீர் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. இக்கழிவுநீர்க் குழாயில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட உடைப்பின் காரணமாக, சென்னை மாநகராட்சியின் 56 மற்றும் 59–வது வட்டங்களில் உள்ள தெருக்களில் 7–6–2018 அன்று தற்காலிகமாக கழிவுநீர்த்தேக்கம் ஏற்பட்டது. அக்கழிவுநீர்க் குழாயில் ஏற்பட்ட உடைப்பு, போர்க்கால அடிப்படையில், 7–6–2018 அன்று இரவே சரி செய்யப்பட்டது. தற்போது இராயபுரம் கழிவுநீரேற்று நிலையம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும், அந்த பைப் 50 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்டது என்று உறுப்பினர் சொன்னது உண்மைதான். அதனால், 3.8 கிலோ மீட்டர் நீளத்திற்குப் போடப்பட்ட 600 மில்லி மீட்டர் விட்டமுள்ள வார்ப்பு இரும்புக் குழாயை–cast iron pipe–ஐ 750 மில்லி மீட்டர் விட்டமுள்ள புதிய இரும்புக் குழாயாக மாற்றுவதற்கு 9 கோடி ரூபாய் அளவில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்கு கண்டிப்பாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் காமராசர் பெயரில் இருக்கை அமைத்தல் மற்றும் மதுரை, காந்தி அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

2018 ஜூலை 4]

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக் கண் திறந்த நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், மதிய உணவு தந்தவர்; குழந்தைகளுக்குச் சீருடைகள் தந்தவர்; 9 ஆண்டுகளுக்கு மேலாக எந்தவிதமான தவறும் இல்லாத ஓர் அரசை நடத்திக் காட்டியவர். இவ்வளவு பெரிய மனிதருக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஓர் இருக்கை அமைத்திட வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைக்கிறோம். அங்கு காமராஜர் கொள்கை ஆய்வு இருக்கையை அமைப்பதன்மூலம், நமக்குப் பின்னுள்ள சந்ததியினரும், அவருடைய செயல்பாடுகளைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்தப் பல்கலைக்கழகம் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், அதற்கு 3 கோடி ரூபாய் தேவை என்று சொல்லியிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அவ்வாறு தேவைப்பட்டால்கூட, அந்தச் செலவை அரசே செய்ய வேண்டும். அதை மிகப்பெரிய மனிதருக்குச் செய்கின்ற ஒரு புகழாரமாக எண்ணி, உடனடியாக அந்த இருக்கையை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையை இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் உங்களை வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களும் ஒரு கேள்வியை உங்களிடம் கேட்கவிருக்கிறார். இரண்டிற்கும் சேர்த்து பதில் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.*

***முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைக் கேட்க வாய்ப்பளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2018–2019 ஆம் ஆண்டில் அண்ணல் காந்தியடிகளின் 150–வது பிறந்த நாள் விழா கொண்டாடப்படவிருக்கிறது. இதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, டெல்லியில் ஒரு குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டதாகக் கேள்விப்பட்டேன்.*

இந்தியாவில் இருக்கின்ற ஏழு Gandhi Museums-*ல் ஒன்றேயொன்றுதான் தென் மாநிலங்களில், மதுரையில் செயல்பட்டு வருகிறது. ராணி மங்கம்மாள் அரண்மனையில் செயல்பட்டு வருகின்ற காந்தி அருங்காட்சியகத்திற்கு 2012 ஆம்*

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2018 ஜூலை 4

ஆண்டு வரை வருடத்திற்கு 7 இலட்சம் ரூபாய் அரசாங்கம் வழங்கிக் கொண்டு வந்திருக்கிறது. 2013 ஆம் ஆண்டில் 3 இலட்சம் ரூபாய் மட்டும் கொடுத்திருக்கிறது. அதற்குப் பிறகு, அது முற்றிலும் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதுவரைக்கும் backlog dues கிட்டத்தட்ட 39 இலட்சம் ரூபாய் பாக்கியிருக்கிறது. அண்ணல் காந்தியடிகளின் 150–வது பிறந்தநாள் விழா கொண்டாடப்படும் இந்தச் சிறப்பான வருடத்தில், இந்த நிதியை உடனடியாகச் செலுத்தி, இந்த விழாவை சிறப்பாக நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘இந்த மண்ணில் மணக்கிற மல்லிகைப் பூ, எங்க மனசை எடுத்துச் சொல்லும்’ என்று நாட்டுப்புறப் பாடல்களிலேயும், ‘மாமதுரை போற்றுதும், மாமதுரை போற்றுதும்’ என்று சிலப்பதிகாரத்திலும் போற்றிப் புகழப்படும் மதுரைக்கு, தனிப்பெரும் பெருமையாக இருக்கும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை காந்தி அருங்காட்சியகம் ஆகிய இரண்டு நிறுவனங்கள் குறித்தும் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பெருந்தலைவர் காமராஜர் பெயரால் தமிழ் இருக்கை அமைப்பதற்காக, மாண்புமிகு அமைச்சர் திரு. செல்லூர் கா. ராஜூ அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களும் சில கோரிக்கைகளை ஏற்கெனவே எடுத்து வைத்ததன்பேரில், இதற்கான கருத்துரு தயாரிக்கப்பட்டு, குறிப்பாக Center for Kamarajar Studies என்ற பெயரில் அமைக்க ஏற்கெனவே முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அண்மையில் புரட்சித் தலைவர் மக்கள் திலகம் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் 1 கோடி ரூபாய் வைப்புத் தொகையில் கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்விருக்கை மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

2018 ஜூலை 4] [திரு. க. பாண்டியராஜன்]

அதுமட்டுமின்றி, பனாரஸ் பல்கலைக்கழகம், உஸ்மானியா பல்கலைக்கழகம், திருவேங்கடவன் பல்கலைக்கழகம், கர்நாடகா பல்கலைக்கழகம், குஜராத் வித்யாபீடம், கிருஷ்ணதேவராயர் பல்கலைக்கழகம், உத்கல் பல்கலைக்கழகம், அனந்தபூர் மற்றும் மொரிஷியஸ் பல்கலைக்கழகம், டில்லி ஜெ.என்.யு. பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களில் ஆய்விருக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஹார்வேர்டு பல்கலைக்கழகத்திலும் தமிழ் ஆய்விருக்கை அமைக்க 10 கோடி ரூபாய் தமிழக அரசால் கொடுக்கப்பட்டுள்ளது. மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையிலும், பசும்பொன்னார் பெயரிலும், ஜாகிர் உசேன் பெயரிலும், குருநானக் பெயரிலும், திருக்குறள் பெயரிலும் மற்றும் இஸ்லாம் (Islamic studies), *கிறிஸ்தவ* (Christian studies) *பெயர்களிலும் இருக்கைகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், விதி 110–ன்கீழ் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலும், ஜோகன்னஸ்பெர்க் பல்கலைக்கழகத்திலும், மலேயா பல்கலைக்கழகத்திலும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் இருக்கைகள் உருவாக்குவதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில், நமது பெருந்தலைவர் பெயரில் தமிழ் இருக்கை, குறிப்பாக ஆரம்பக் கல்வி சார்ந்த ஆய்வை செய்யக்கூடிய ஓர் இருக்கையை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, வெகு விரைவில் நல்ல முடிவு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

காந்தி மியூசியத்தைப் பொறுத்தவரையில், அண்மையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தபோது, காந்தி அருங்காட்சியகத்திற்கு 10 கோடி ரூபாய் corpus fund *கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆண்டுக்கு ரூ.3 இலட்சமாக இருந்த நல்கையை உயர்த்தி வழங்கியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். மாண்புமிகு அம்மா அவர்கள், 2014 ஆம் ஆண்டு, 3 இலட்சம் ரூபாயிலிருந்த நல்கையை, 7 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், அதில், காந்தி மியூசியத்திற்கு சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறார்கள். காந்தி அருங்காட்சியகத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். மாநில அரசாங்கம் 16 ஏக்கர் நிலத்தை காந்தி மியூசியத்திற்குக் கொடுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, முதலில், 1¼ கோடி ரூபாயை*

அதன் கட்டடத்திற்காக, renovation–க்காக கொடுத்திருக்கிறோம். இவையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கு முன்னால், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டன. 1981 ஆம் ஆண்டு மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது, புரட்சித் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அந்த மியூசியம் கட்டி எழுப்பப்பட்டது. தற்போது, 7 இலட்சம் ரூபாய் நல்கை அளிக்கப்பட்டபோது, விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு சில தளர்வுகளை அவர்கள் கேட்டார்கள். அந்தத் தளர்வுகள் தற்போது தரப்பட்டுள்ளன. இன்னும் வெகு விரைவில், 10 நாட்களுக்குள் 35 இலட்சம் ரூபாய் நல்கை அவர்களுக்குத் தரப்படும். அதைவிட பெரிய விஷயம், 'ஒரு அரை நிர்வாண பக்கிரி' என்று வின்சென்ட் சர்ச்சில் அவர்களால் சொல்லப்படும் அளவுக்கு, காந்தி அவர்கள் தன்னுடைய வேஷ்டி, சட்டையை மாற்றும் உடை உருமாற்றம் நிகழ்ந்தது மதுரையில். அதை நினைவுகூரும் வகையில், அந்த இடத்தை விரிவாக்கம் செய்து, அந்த இடத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளையும், ஆய்வாளர்களையும், ஆர்வலர்களையும் அதிகப்படுத்துவதற்காக, 10 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறார்கள். அதற்கும் முயற்சி செய்து, கொண்டு வருவோம். அந்த இடம் Centre of Excellence ஆக உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஊ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி, நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இதுபோன்று திடீர், திடீரென எழுந்து நிற்காதீர்கள். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். இன்று காலை 9.40 மணியளவில் விதி 55–ன்கீழ் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்துவிட்டு, தற்போது உடனே அவையில் அதை எழுப்ப வேண்டும் என்று கூறினால் எப்படி அனுமதிக்க முடியும்? நான் அதை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்ப வேண்டுமல்லவா! மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் வாங்க வேண்டுமல்லவா! (குறுக்கீடு) நீங்கள் இப்படியெல்லாம் raise செய்வது முறையல்ல. கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள், அது என் ஆய்வில் இருக்கிறது. பார்த்துக்கொள்ளலாம், உட்காருங்கள்.